NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p8
**Date:** 3 August 2022

# நீச்சலில் சிங்கப்பூருக்கு வெள்ளி



பர்மிங்ஹம்: காமன்வெல்த் விளையாட்டுகளின் சிறப்புத் தேவையுடையோருக்கான ‘எஸ்7’ 50 மீட்டர் எதேச்சைபாணி நீச்சல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார் சிங்கப்பூரின் டோ வெய் சூங் (படம்). அவர் எடுத்துக்கொண்ட நேரம் 29.01 வினாடிகள்.

எனினும், இதைவிடச் சிறப்பாகத் தன்னால் நீந்தமுடியும் என்று நம்புவதாக 23 வயது டோ குறிப்பிட்டார். டோவின் தனிப்பட்ட தேசிய சாதனை நேரம் 28.65 வினாடிகளாகும்.

இப்போட்டியை 28.95 வினாடிகளில் முடித்த ஆஸ்திரேலியாவின் மேத்தியூ லெவி தங்கத்தைக் கைப்பற்றினார். வெண்கலம் தென்னாப்பிரிக்காவின் கிரிஸ்டியன் சேடிக்குச் சென்றது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.